# <u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.75/2018 தேதி- 03.11.2025
(P.W.1) - மேக்ளின்

<u>**1-**ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. என் தாய் சீத்தா என்பவர் 1-ஆம் பிரதிவாதிக்கு எதிராக சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 18/2014 என்ற தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தற்போது அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் கிரைய ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் தான் இந்த வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு உரிமையுள்ளதா என்று முடிவுசெய்ய முடியும் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வாக்கு நிலுவையில் உள்ளபோது இந்த பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித முகாந்தரமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சீத்தாவின் கணவர் தேவதாஸன் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் லீலாபாய்க்கும், தேவதாஸன்க்கும் இடையே ஏற்கனவே திருமணம் நடைப்பெற்று இருந்தது என்றால் சரிதான். தேவதாஸன்க்கும் லீலாபாய்க்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள் ஆகும். தேவதாஸன்க்கும், லீலாபாய்க்கு விவாகரத்து ஆனது சம்மந்தாமகா எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன வாறு விவாகரத்து ஏதும் ஏற்படாததால் தான் அதைப்பற்றிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தயாருக்கும் சீத்தாவிற்கும் தேவதாஸன்க்கும் திருமணம் நடைபெற்றது சம்மந்தமாக ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் என்னுடைய பிறப்பு சான்றிதழ் மற்றும் குடும்ப அட்டை உள்ளது. விவகாரத்து ஆகாமால் என் அம்மா தான் தேவதாஸன்க்கு மனைவி என்று இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ளது சட்டடத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. லீலாபாய் என்பவரின் குழந்தைகளுக்கு எதிராக பத்மனாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.197/2013 என்ற வழக்கை நானும் என் குடும்பத்தாரும் தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன 3 வழக்குகளும் என் தந்தை இறந்த பிறகு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்குகள் அனைத்தும் சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட

வழக்கு என்றால் சரியல்ல. தேவதாஸன் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2012 மே மாதம் ஆகும். தேவதாஸன் உடல்நிலை சரியில்லாமல் இறந்தாரா என்றால் இறப்பதற்கு 2 , 3 வாரங்கள் படுக்கையில் இருந்தார்.

3. என் அப்பா என் அம்மா பெயரில் ஏதாவது ஆவணம் எழுதி வைத்தாரா என்றால் விலை ஆவணம் 2012 -ஆம் ஆண்டு வேர்கிளம்பி சார் பதிவாளர் அலுவலகத்தில் எழுதிக்கொடுத்தார். நான் சொல்வதுபோல் 2012-ல் என் அப்பா சுயநினைவோடு எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணம் போலியானது என்றாலும் தேவதாஸன் மனைவி சீத்தா என்று போலியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன கிரைய ஆவணமான வா.சா.ஆ.5 ஆவணத்தில் என் அப்பா மருத்துவ செலவுகளை நானும் என் அம்மாவும் பார்த்துக்கொண்டோம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 2012 காலகட்டத்தில் என் அப்பா எங்களுடன் ஒரே வீட்டில் வசித்து வந்திர்களா என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தில் என் அப்பா மருத்துவ செலவுகளை உடன் இருந்து பார்த்துக்கொண்டதால் வா.சா.ஆ. 5 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன வா.சா.ஆ.5 ஆவணத்தில் எந்தவித கிரைய தொகையும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் எவ்வித கிரைய தொகையும் பரிமாற்றம் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி நினைவில்லை.

4. மேற்சொன்னவாறு எவ்வித கிரையமும் ஏற்படவில்லை என்பதால் தான் தற்போது நீதிமன்றத்தில் நினைவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன எவ்வித கிரைய தொகையும் இல்லாமல் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் வா.சா.ஆ.5 ஆவணம் என்றால் சரிய்லல. மேற்சொன்ன தேவதாஸ் கையொப்பம் செய்வரா கைரேகை செய்வார என்றால் பொதுவாக கையொப்பம் செய்வார் வயது முதிர்ந்த காலத்தில் கைரேகை மட்டும் செய்தார். வயது முதிர்ந்த காரணமாக தேவதாஸன் கைரேகை மட்டும் செய்தார் என்பதை காண்பிப்பதற்காக ஆவணம் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். மேற்சொன்ன தேவதாஸன் எந்த ஆவணத்திலும் கைரேகை செய்யமாட்டா என்றாலும் கையொப்பம் மட்டும் தான் செய்வார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணம் வா.சா.ஆ 5 ஆவணம் அவர் சுயநினைவுடன் இருந்தபோது ஏற்படுத்தப்படவில்லை என்பதால் தான் வா.சா.ஆ.5 ஆவணத்தில் கைரேகை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஆனைக்குழி புத்தன்வீட்டில் வசித்து வருவதாக அதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒருபோதும் வழக்கு பட்டிகை

சொத்தில் நான் குடியிருந்து வரவில்லை என்றாலும் அதனால் தான் அதை நிரூபிக்க எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2012 மற்றும் 2014 காலகட்டத்தில் வழக்கு பட்டிகை சொத்தில் இருந்தது இல்லை என்றாலும் நான் சென்னையில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான்.

5. வழக்கின் விவரங்கள் ஏதும் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. தேவதாஸன்க்கு எதிராக இவ்வழக்கின் 1-ஆம் பிரதிவாதி அசல் வழக்கு எண். 70/2007 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு தேவதாஸன்க்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்ப்பாகப்பட்டது என்று தெரியுமா என்றால் 2013 -க்கு பிறகு தெரியும். என் சத்திய பிரமான வாக்குமூலத்தில் என் அம்மா ஒரு குடிசை வீடு கட்டியுள்ளதாகவும் அதில் வசித்து வந்தாகவும் சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அது குடிசை வீடு மோட்டார் ரூம் ஆகும். ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய சத்திய பிரமான வாக்குமூலத்தில் குடிசை வீட்டில் என் அம்மா வசித்து வந்ததாக எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் நினைவில்லை. பட்டிகை சொத்து முழுக்க முழுக்க 1-ஆம் பிரதிவாதியின் கைவசம் மற்றும் அனுபவத்தில் உள்ளது என்றாலும் அதனால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலியான ஆவணங்களை அரசு அதிகாரிகள் மூலம் பெற்று உத்தரவு பெற்றுள்ளார்.

6. அசல் வழக்கு எண்.70/2007 வழக்கு என் அப்பாவிற்கு எதிராக தீர்ப்பாகபட்ட பிறகு என் அப்பா மேற்சொன்ன உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடோ, setaside மனுவோ தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு வழக்கு இருந்தது என் அப்பாவிற்கு தெரியாது அப்போது என்னுடன் சென்னையில் வசித்து வந்தார். வழக்கின் 1-ஆம் பிரதிவாதியிடம் என் அப்பா ரூ.27.000/- கடனாக 26.03.1994-ல் பெற்றுக்கொண்டு அதற்கு பிரதிபாலனாக ஒரு கடன் உறுதி சீட்டு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. 26.03.2001 தேதிக்குள் கடன் தொகையை திரும்ப செலுத்த வேண்டும் என்றாலும் அதுவரை பட்டிகை சொத்திடல் 1-ஆம் பிரதிவாதி அனுபவம் செய்து வரலாம் என்று அனுபவ உரிமைத்தை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. 22.01.1999 ல் ஒரு வாய்மொழியாக ஒப்பந்தம் செய்துகொண்டு ரூ.35000/ விலை பேசி ஏற்கனவே கடனாக பெற்ற ரூ.27000/- கழித்து மீதமுள்ள ரூ. 8000/- தொகையை பெற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் 1-ஆம் பிரதிவாதி மீண்டும் அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன காலகட்டத்தில் என்னுடன் என் அப்பா சென்னையில் வசித்து வந்தார். மேற்சொன்ன அனுபவ உரிமத்தின் படி தற்போது வரை 1-ஆம் பிரதிவாதி வீடு வைத்து

வழக்கு பட்டிகை சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன 1-ஆம் பிரதிவாதிக்கு பேசியபடி தேவதாஸன் விலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்காததால் 1-ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு 14.12.2006 -ல் தேவதாஸன்க்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

7.மேற்சொன்ன வழக்கறிஞர் அறிவிப்பு பெறாமல் வேண்டுமென்றே திருப்பி அனுப்பட்டது என்றால் சரியல்ல. தேவதாஸன் 1-ஆம் பிரதிவாதியை ஏமாற்றிவிட்டார் என்று தெரிந்த பிறகு தான் அசல் வழக்கு எண். 70/2007 என்ற வழக்கை உரிமையியல் நீதிமன்றம் பத்மனாபபுரத்தில் தாக்கல் செய்யப்பட்டு தேவதாஸன் வழக்கை நடத்தாதால் 07.12.2007 -ல் செலவு தொகையுடன் ஒருதலை பட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்று மனு. 71/2008 என்ற மனுவை தாக்கல் செய்து அந்த மனுவின் அடிப்படையில் 17.06.2009 -ஆம் தேதி நீதிமன்ற கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தது என்றாலும் மேற்சொன்ன ஆவணம் 20.07.2009 அன்று வேர்கிளம்பி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1367/2009 என்று பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன ஆவணத்தின் அடிப்படையில் பட்டிகை சொத்தில் அதற்கான உரிமைப் பெற்று கரதீர்வை ரசீது செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல அது போலியான ஆவணம் ஆகும்.

8. மேற்சொன்ன வழக்கில் அடிப்படையில் தேவதாஸனுக்கு உரிமைப்பட்ட அனைத்து உரிமைகளையும் நீதிமன்றம் மூலம் 1-ஆம் பிரதிவாதிக்கு விட்டுக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கு சம்மந்தாமான அனைத்து விவரங்களும் எனக்கும், தேவதாஸனுக்கும், என் அம்மாவுக்கும் தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பட்டிகை சொத்தின் நிலவரி ரசீது, குடும்ப அட்டை, மின் இணைப்பு ரசீது, குடிநீர் கட்டணம் அனைத்தும் 1-ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. 1-ஆம் பிரதிவாதியின் அனுவத்தை இடையூறு செய்ததாக மேல் அதிகாரிகளுக்கு புகார் அளிக்கப்பட்டு அவர்களை எந்தவித பிரச்சனை செய்யக்கூடாது என்று அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தான் 1-ஆம் பிரதிவாதிக்கு எதிராக புகார் அளித்தோம். என் தந்தை இறந்த பிறகு தான் 6 ஆண்டுகளுக்கு பிறகு தான் வேண்டுமென்றே வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு உரிமையில்லாத சொத்தை என் அம்மாவிற்கு எழுதிக்கொடுக்க எவ்வித உரிமையும் இல்லாததால் அந்த ஆவணம் போலியான ஆவணம் என்றால் சரியல்ல. அசல்

வழக்கு எண். 70/2007 என்ற வழக்கு எதிராக மேல்முறையீடு செய்யாமல் அதில் எந்த ஒரு நிவாரணமும் கேட்காமல் தற்போது மேற்சொன்ன வழக்கில் கட்சியாக இல்லாத நான் அசல் வழக்கு எண். 70/2007 -ல் பிறப்பித்து நீதிமன்றம் மூலம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை ரத்து செய்ய இந்நீதிமன்றம் மூலம் நான் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் என் அம்மாவிற்கு எவ்வித உரிமையும் கிடைக்காது என்றால் சரியல்ல. மேற்சொன்ன சங்கதிகளை மறைத்து போலியான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**2** முதல் **6** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரனை</u>

1. வழக்கு சொத்து சம்மந்தமான கிரைய ஆவணம் நீதிமன்ற மூலம் பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வருவாய் ஆவணங்கள் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்றம் விலை ஆவணம் ஏற்படுத்திக்கொடுப்பதற்கு முன்பே வருவாய் ஆவணங்கள் 1-ஆம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டது.அசல் வழக்கு எண். 70/2007 என்ற வழக்கில் 2 முதல் 6 பிரிதிவாதிகள் கட்சி இல்லை என்றால் அதுபற்றி தெரியாது. என் அம்மா மாண்புமிகு சார்பு நீதிமன்ற பத்மனாபபுரம் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 18/2014 என்ற வழக்கிலும் 2 முதல் 6 பிரதிவாதிகள் கட்சி இல்லை என்றால் அதுபற்றி நினைவில்லை. இவ்வழக்கில் வா.சா.ஆ 9 மற்றும் 11 ஆவணங்கள் அசல் ஆவணம் இல்லை என்றாலும் நகல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்து என்றால் சரிதான். இவ்வழக்கில் 2 முதல் 6 வரையான பிரதிவாதிகளை கஷ்ட, நஷ்டபடுத்த வேண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேளன் என்றாலும் வழக்கு 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.